# வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி

(விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியப்பட்டது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்ற தன்னாட்சி கல்லூரி
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'ஏ++' தரம் (நான்காம் சுற்று) பெற்றது

**விருதுநகர் - 626 001.**

உயர்ந்த கல்வி சிறந்த பண்பு

# பாரதி விழா

**பள்ளி மாணவ - மாணவியர்க்கான போட்டிகள்**

## அறிவிப்பும் அழைப்பும்

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

நினைவு நாள் - செப்டம்பர் - 11



கற்பக விநாயகக் கடவுளே போற்றி !
சிற்பர மோனத் தேவன் வாழ்க !

போட்டிகள் நடைபெறும் நாள் : **31.08.2024** சனிக்கிழமை

நேரம் : **1.30** மணி முதல் **5.00** மணி வரை

பரிசுகள் வழங்கும் நாள் : **11.9.2024** புதன்கிழமை

நேரம் : **2.30** மணி முதல் **4.00** மணி வரை

"வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்,
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்தநல் லறிவு வேண்டும்

பேரன்புடையீர்,

மகாகவி பாரதியாரின் நினைவினைப் போற்றும் வகையில் இவ்வருடம் 2024-இல் பாரதியின் வாக்கினை, சிந்தனைகளை, அறிவுப் புதையல்களைப் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் விதமாகப் போட்டிகள் நடத்த விழைகிறோம். பள்ளி மாணவ மாணவியர்க்கு பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன. எங்கள் முயற்சிக்கு ஆதரவு நல்கும்படி அனைத்துப் பள்ளி முதல்வர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். இவ்வருடம் அதிகப் புள்ளிகள் பெறும் பள்ளிக்குச் சுழற்கேடயம் வழங்க எமது கல்லூரி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஆகவே அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று சுழற்கேடயம் பெற்றுக் கொள்ளத் தங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

## போட்டிகள் விபரம் பின்வருமாறு

1. **பாரதியார் பாடல்கள் பாடும் போட்டி - மூன்று பிரிவுகள்**
   1. 3, 4, 5 - ம் வகுப்பு மாணவ - மாணவியர் - 1ம் பிரிவு
   2. 6, 7, 8 - ம் வகுப்பு மாணவ - மாணவியர் - 2ம் பிரிவு
   3. 9, 10,11,12 - ம் வகுப்பு மாணவ - மாணவியர் - 3ம் பிரிவு

   **விதிமுறை :** திரைப்படப் பாடல்கள், தனித்தொகுப்பு பாடல்கள், சொந்த மெட்டமைத்துப் பாடும் பாடல்கள் - இவைகளில் தங்களுக்கேற்றதை தேர்வு செய்து பாடலாம். பாரதியாரின் பாடல்களாக இருப்பது அவசியம்.

2. **பாரதியார் பாடல்கள் பாவனையோடு ஒப்புவித்தல் போட்டி - மூன்று பிரிவுகள்**
   1. 3, 4, 5 - ம் வகுப்பு மாணவ - மாணவியர்
      (பாடல் - அச்சமில்லை என்று தொடங்கும் ............ இறுதி வரை பாடல் - 3 பத்திகள்)
   2. 6, 7, 8 - ம் வகுப்பு மாணவ - மாணவியர் -
      (பாடல் - நான் ......... வானிற்பறக்கின்ற... என்று தொடங்கும் முதற் பாதி நான் ....... 7 பத்திகள்)
   3. 9, 10,11,12 - ம் வகுப்பு மாணவ - மாணவியர் -
      ( பாடல் - தமிழ்த்தாய் .... ஆதிசிவன் என்று தொடங்கும் பாடல்)

"பக்தி வாழி பல பல காலமும்
உண்மை வாழி, ஊக்கமும் வாழி"

3. வினா - **விடைப் போட்டி** - 9,10,11,12-ம் வகுப்பு **மாணவ மாணவியர்க்கு மட்டும்**

பாரதியாரின் கவிதைகள், வாழ்க்கை வரலாறு, அறிஞர்களின் கருத்து - இவைகளை ஒட்டி கேள்விகள் எழுத்துத் தேர்வு வழிகேட்கப்படும். அதில் தேர்ந்தெடுக்கப்படுபவர் காணொலிக் காட்சி - வினாவிடைப் போட்டியில் பங்கு பெறுவர்.

4. **மாறுவேடப் போட்டி - இரு பிரிவுகள்**
   1. L.K.G, U.K.G - மாணவ - மாணவியர் - 1ம் பிரிவு
   2. 1, 2 ம் வகுப்பு மாணவ - மாணவியர் - 2ம் பிரிவு

விதிமுறை : பாரதி வேடம்-பேசுதல், பாடுதலுக்கு 1 நிமிடம் வழங்கபடும்.

**பொதுவான விதிமுறைகள் :**

1. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
2. ஒரு பள்ளிக்கு ஒரு பிரிவில் இரு மாணவர் / மாணவியர் கலந்து கொள்ளலாம்.
3. மாறுவேடப் போட்டியில் ஒரு பிரிவிற்கு 3 மாணவ / மாணவியர் கலந்து கொள்ளலாம்.
4. கலந்து கொள்ளும் மாணவ / மாணவியரின் பெயர்பட்டியலை **ஆகஸ்ட் 21**ம் தேதிக்குள் அனுப்பிவைத்தல் நலம்.
5. போட்டிகள் அனைத்தும் கல்லூரி பல்நோக்குப் பயன்பாட்டரங்கில் (Multi purpose hall) இருந்து ஆரம்பிக்கப்படும்.
6. பள்ளியிலிருந்து தலைமை ஆசிரியர் கையொப்பமிட்ட பெயர்பட்டியலில் உள்ளவர் மட்டுமே போட்டிகளில் பங்கு பெற முடியும்.
7. போட்டிகளில் பங்கேற்பவரின் பெயர் மற்றும் முன்னெழுத்து (Initial) தமிழில் மட்டுமே இருக்க வேண்டும்.

போட்டி ஒருங்கிணைப்பாளர் : முனைவர் **பா. நாகஜோதி**

பாரதி விழா செயற்குழு செயலர்கள் : முனைவர் **ஜெ. காவேரி**
முனைவர் **ஆ. ஆனந்தி**
முனைவர் **சௌ. ஜெயா**

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

### பாரதி விழா செயற்குழு அமைப்பாளர்கள்

முனைவர் **பா. அருள்ஜோதி** திருமதி **கு. ஜோஸ்பின்மாலதி**
முனைவர் **கா. பிரேமா** செல்வி **கோ. யோகப்பிரியா**
செல்வி **செள. இராஜலட்சுமி** செல்வி **ஆ. மீனலோசினி**

### எங்கள் மதிப்புறு ஆலோசனைக் குழுவினர்கள் :

திரு. **V.V.V.A. மகேந்திரன்** B.Sc., L.L.B.,
புரவலர்

திரு. **T. பழனிச்சாமி** B.Com.,
தலைவர்

திருமதி. **S. சிவபாலஈஸ்வரி சந்தோஷ்குமார்**
உப தலைவர்

திரு. **P.C.S. கோவிந்தராஜபெருமாள்** B.A.,
செயலாளர்

திருமதி. **G. லதா** B.Com.,
கூட்டுச் செயலாளர்

திரு. **K. ரவிசங்கர்** M.Com.,
பொருளாளர்

முனைவர் (திருமதி). **S. சிந்தனா** M.A., M.Phil., Ph.D.,
கல்லூரி முதல்வர்

**தொடர்புக்கு :**

nagajothib@vvvcollege.org / bharathivizhatamilself@gmail.com
அலைபேசி எண் : 97501 56669, 99942 73317, 97862 34865

குறிப்பு : ஒருங்கிணைப்பாளர்களின் செல்பேசியில் தொடர்பு கொண்டோ, அல்லது மெயிலில் தொடர்பு கொண்டோ தாங்கள் மேலும் விளக்கங்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

தங்கள் குழந்தைகளுக்குள் புதைந்து கிடக்கும் பேராற்றாலை வெளிக் கொணர நல்லதொரு வாய்ப்பு, வெற்றி வீரர்களாய், தங்கள் குழந்தைகளை எங்கள் கல்லூரி வளாகத்திற்குள் வலம் வரச் செய்வீர்

**பாரதியாரைப் போற்றுவோம் !!!**

"உச்சி தனை முகர்ந்தால் கருவம் ஓங்கி வளருதடி
மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி"